08.01.2025 அன்று Siddarth Nagar-ல் உள்ள Dispensary-யை பார்வையிடப்பட்டது. அங்கு பொறுப்பில் உள்ள Sr. Joseph Daisy அவர்களிடமும், இல்லத்தலைவி Sr. Pushparani அவர்களிடமும் கலந்துரையாடப்பட்டது. அங்கு பணிபுரியும் அருட்சகோதரிகளின் சிறப்பான பணிகளை பாராட்டி புது வழிமுறைகள் பின்பற்றுவது பற்றி எடுத்துக்கூறப்பட்டது.

St. Francis of Assisi Province-ல் பணிபுரியும் மருத்துவ அருட்சகோதரிகள் அனைவருக்கும் இது மிகுந்த மகிழ்வின் நாளாக அமைந்தது. இதற்கான ஏற்பாடுகளை செய்து ஊக்குவித்த நம் சபை தலைமை அன்னை M. ஆரோக்கியம் மற்றும் நிர்வாக குழுவினர்களுக்கு எங்களது நன்றிகள். குறிப்பாக இந்த நாட்களில் எங்களோடு பயணித்த Sr. Rita Balaya, Provincial அவர்களுக்கு எங்களது நன்றிகள்.







## 2. இலவச மருத்துவ முகாம்: நலம் தேடி





14.01.2025 அன்று காலை ஒன்பது மணி முதல் மதியம் மூன்று மணி வரை மானாமதிகண்டிகை அருகில் ஒரு கிராமத்தில் அருட்சகோதரி. சலேத் அவர்களின் ஒருங்கிணைப்பில் இலவச பொது நல மருத்துவமுகாம் நடைபெற்றது. இதில் மருத்துவர், சகோதரி. சலேத் மற்றும் பணியாளர்கள் இணைந்து மக்களுக்கு தேவையான மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துக்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இதில் பயன்பெற்ற மக்களின் எண்ணிக்கை 200 – க்கு மேல். மக்களை நாடி மருத்துவம் என்ற நிலையில் அம்மக்களை தேடி இலவச மருத்துவ ஆலோசனை வழங்கினோம். இம்மருத்துவ முகாம் மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்தது.

## 3. இலவச முதலுதவி முகாம்:





26.01.2025 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை குழந்தைகளுக்கான இலவச முதலுதவி முகாம் நடைபெற்றது. மறைகல்வி குழந்தைகளின் ஜீபிலி விழா Madras – Mylapore மறைமாவட்டத்தில் நடைபெற்றது. உடல் நலனில் நம்பிக்கையும், நல்வாழ்வும் கொண்டு வாழ மருத்துவ ஆலோசனை மற்றும் முதலுதவியும் வழங்கப்பட்டன. பொது மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தக பணியாளர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டோம். இதில் பயன் பெற்றவர்கள் 100 குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள்.

## 4. TN – CHON: CITY FORUM MEETING

24.01.2025 அன்று Madras Medical Mission (MMM) Hospital வளாகத்தில் Tamil Nadu Christian Healthcare Organization Network (TN – CHON) மற்றும் Catholic Health Association of Tamilnadu (CHAT) ஆகியோர் இணைந்து TNPY Region – Tamilnadu Pondichery Region சேர்ந்த அனைவருக்கும் கருத்தமர்வானது நடைபெற்றது. தமிழ்நாட்டில் இயங்குகிற நலவாழ்வு மையங்கள், நிறுவனங்கள் அதன் இயக்குநர்கள், நிர்வாகிகள், மருத்துவர்கள், Allied Health Science, Nurses, Volunteers And Health Workers மற்றும் Catholic Health Association of Tamilnadu (CHAT) மற்றும் CEF, EMF, St.Thomas Hospital, Isable Hospital இன்னும் பல்வேறு நலவாழ்வு அருட்சகோதரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் நமது நிறுவனத்தைப் பற்றிய பகிர்வும் அதன்பின் நாம் இக்கால கட்டங்களில் மேற்கொள்ளும் பிரச்சனைகளும், நமது நிறுவனத்தின் பலம் என்ன என்பதை பற்றியும் பகிர்ந்தோம். இக்கூட்டம் சிறப்பாக கிறிஸ்தவ இயக்கம் ஒன்றிணைந்து நமது தேவைகளை பூர்த்தி செய்யவும், அனைவரும் இணைந்து செயல்படும் போது நமது நோக்கம் விரைவில் மக்களை சென்றடையும், பலன் கொடுக்கும் என்றும் கருத்து பகிரப்பட்டது. குழுவாக செயல்படுவதன் வலிமையை வலியுறுத்தி கூறப்பட்டது. இறுதிச் செபத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது. இதில் Dr. Sr. Mary Jenova (General Councillor), Sr. Sebastine (Health Commission Secretary), Sr. Mariammal, Sr. Josephine Diviya கலந்து கொண்டோம். இவ்அமர்வானது பயனுள்ள முறையில் அமைந்தது.





**Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator



## 1. இயற்கையை பேணி காப்போம்:

புனித வளனார் மாநில தொலை தொடர்பு பணிக்குழு சார்பாக 22.01.2025 அன்று எமது தாரகை சமூக மையம் பிருதூரில் மரம் வளர்போம் இயற்கையை பேணி காப்போம் என்ற நிகழ்ச்சியை நடத்தினோம். இதில் அனைவருக்கும் மரகன்றுகள் வழங்கப்பட்டது. வந்தவாசி அரசு பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு இயற்கையை எவ்வாறு பேணி காக்க வேண்டும் என்ற கருத்துறைகளை அனைவருக்கும் வழங்கினார்கள். இதற்கான ஏற்பாடுகள் செய்த சகோதரி. ரெக்ஸிலின் அவர்களுக்கு எங்களது நன்றிகள்

## 2. AWARENESS PROGRAMME:





"NOT TO BURN PLASTIC"(SMOKE FREE BOGIE) என்ற நிகழ்வானது வரதராஜபுரம் ஆல்பர்ட் தியேட்டர் அருகில் எழும்பூரில் நடைபெற்றது. இந்நிகழ்வானது லயோலா கல்லூரி மாணவ மாணவிகளோடு இணைந்து எமது தொலை தொடர்பு பணிகுழு வழியாக அருட்சகோதரி உஷா குழந்தை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு Rev. Fr. Louis SJ, Prof. Priya, Dr. K. Velarasan ஆகியோர் தங்கள் உடன் உழைப்பை வழங்கினார்கள்.

### 3. Drawing Competitions



On the occasion of Christmas celebration drawing competition was conducted by Communication Commission for all the sisters in St . Francis of Assisi Province on the title " My little crib".Sisters actively participated and expressed their excellent art as per the theme given. Congratulations to all Sisters for your generous contribution of art . We Congratulate Rev. Sr. S. Arockia Mary for her Initiation.

## 4. DIGITAL PLATFORM

05.01.2025 அன்று அச்சிறுப்பாக்கம், சென்னை மாநில தலைமையகத்தில் Digital Platform என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தமர்வானது அருட்பணி. John Paul, Sdb அவர்களால் வழிநடத்தப்பட்டது. Seven Laws for the Data Management என்ற தலைப்பில்

1. Save Time and Energy - நேரம் விரயமாக்கக்கூடாது.
2. Support Each Other
3. Improve Standard of Congregation and Community (செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்)
4. செய்த தவறுகளை திரும்ப செய்யாமல் இருத்தல்.
5. ஒவ்வொரு செயல்பாடுகளும் நிறுவனத்திலிருந்து அடுத்த நிலைக்கு செல்ல வேண்டும். குழுவாக இணைந்து செயல்பட வேண்டும்.
6. Personal Safety
7. எல்லாருமே சேர்ந்து செயல்பட வேண்டும்





போன்ற கருத்துக்களை கூறினார்கள். சபையில், மாநிலத்தில் Documents Update ஆக வைக்க வேண்டும் இதனை Digital மூலமாக எப்படி நடைமுறை படுத்த வேண்டும், அரசாங்க சட்ட திட்டங்களுக்கு சரியான விதத்தில் பதில் சொல்ல நமது ஆவணங்களை சரியாக கையாள வேண்டும் போன்ற யுத்திகளை கற்று கொடுத்தார்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

# சமூக பணிக்குழு

## 1. சிறையில் பொங்கல் விழா:



14.01.2025 செங்கல்பட்டு மாவட்ட சிறை மற்றும் சிறுவர்களுக்கான அரசு சிறப்பு பள்ளியில் பொங்கல் விழாவானது சிறப்பாக கொண்டாடப்பட்டன. பொங்கல் விழா வாழ்த்து செய்தி வழங்கி பொங்கல் தயார் செய்து அனைவருக்கும் கொடுக்கப்பட்டன. அதற்கான செலவுகளை தலைமையகத்தின் கீழ் இயங்கிவரும் சமூக பணிமையம் பொறுப்பேற்று கொண்டது. இந்நிகழ்வில் 250 சிறைவாசிகளும், 72 சிறப்பு பள்ளி சிறார்களும் கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள். இதனை மறை மாவட்டத்தோடு வழிநடத்திய Rev. Sr. Marina அவர்களுக்கு எங்களின் நன்றிகள்.

## 2. சிறைசந்திப்பு:

செங்கல்பட்டு மாவட்ட சிறை மற்றும் மதுராந்தகம் கிளை சிறை சந்திக்கப்பட்டன. சந்தித்த சிறை வாசிகள் 43 நபர்கள், அலைபேசியில் தொடர்புக் கொண்ட சிறைவாசிகளின் குடும்பங்கள் 24, பெயில் எடுக்கப்பட்டவர்கள் 6 நபர்கள், இரண்டு குடும்பங்களுக்கு மளிகைப்பொருட்கள் கொடுக்கப்பட்டன, ஆற்றுப்படுத்தப்பட்டவர்கள் 13 நபர்கள். இப்பணியினை செங்கல்பட்டு மறைமாவட்டத்துடன் இணைந்து நமது சபை சகோதரிகள் Sr. Marina மற்றும் Sr. Francis Pappu செய்தார்கள்.

## 3. மாலைநேர வகுப்பு மாணவர்களின் நடனபோட்டி



23.01.2025 அன்று முகாம் என்ற இடத்தில் மாலை நேர வகுப்பு மாணவ மாணவியர் இருவர் நடன போட்டியில் கலந்து கொண்டு திருவண்ணாமலை மாவட்ட அளவில் முதலிடம் பெற்றார்கள். மேலும் குழந்தைகள் பேச்சு போட்டி, கவிதை போட்டி, நடன போட்டி என்று எல்லாவற்றிலும் முதலிடம் பிடித்து எமது மாலை நேர வகுப்புக்கு பெருமை பெற்று தந்தார்கள். இவர்களை வாழ்த்துகிறோம். குழந்தைகளுக்கு பயிற்சி கொடுத்த ஆசிரியை கிறிஸ்டி அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

**Sr. Arul Mary**
*Social Work Commission, Co-ordinator*

# பணி நிறைவு – வாழ்த்து மடல்

சகோதரி. மரிய சற்பிரசாதம்

திருவாளர் ஜோசப் – திருமதி. அல்போன்ஸ்
இவர்களின் இரத்தினமே
தெய்வத்திரு ஊராம்
திரேசாபுரத்தின் சித்திரமே
தூய நெஞ்ச மகளிர் மேல்நிலைப் பள்ளியின்
வரபிரசாதமே.

தனயன் தம்பி நால்வரோடும்
அக்கா தங்கை மூவரோடும்
குடும்பம் என்னும் கோவிலில் பின்னி
பிணைந்திரே
பெரும் புயல் சூழற்றி அடித்ததே
உங்கள் வாழ்விலே
தாழ்வலுத்த மண்டலமாக மையம் கொண்டது
இறைபணியிலே

நீவிர் கொண்டதோ ஆன்மீக தாகமே
அதனால் உருவானதோ
எளிமையின் கோலமே
எழுந்து வந்த இன்னல்களை வென்றிரே
வேள்வித்தியாய்
வெண்நிற ஆடைக்குள்
அடக்கினீர் தன்னையே

ஆனந்தமாய் துறவற பணி ஏற்றாய்
வளனாரின் பிரான்சிஸ்கன் சபை தனிலே
இறைஇயேசுவில் ஒன்றென இணைந்து
வெள்ளி விழாவும் கொண்டிரே
கல்வி பணியை புதுக்கோட்டையில்
தொடங்கினீரே

பள்ளி தலைமை அனைத்தும்
கோயிலென கொண்டவரே
அடியெடுத்து வைத்தீர் ஒன்பது பள்ளிகளிலே
இறுதியாக வந்து நின்றீர் வந்தை மண்ணிலே
ஓய்வின்றி உழைத்தீர் 37 வருடங்களாய்



உணவு உண்ண மறந்திருக்கலாம் ஏன்
மூச்சுக்காற்றையும் மறந்திருக்கலாம்
நொடி பொழுது கூட பள்ளியை
மறந்ததில்லையே
உங்கள் தாரக மந்திரம் கடவுள், பக்தி,
ஒழுக்கம், படிப்பு
எங்கள் மாணவிகளின் மனதிலே

மின்காந்த அலைகளாய் ஊடுருவினீர்
ஆசிரியர்களின் இதயங்களிலே
பட்டாம்பூச்சி போல அச்சமின்றி
பணிசெய்ய ஊக்கமளித்தாய்

நறுமண மலர்களின் வாசம் போல
உம் பாசம் கூட
எம் குழந்தைகளின் உள்ளமதில் வீசுமே

எம் பள்ளியின் ஒவ்வொரு வகுப்பறையும்
ஏங்கி நிற்க்கும் தாயே
வண்ண மலர்களின் பொழிவை போல
மலர்ந்து சிறந்து ஒளிர்ந்திட
இறைவனடி வேண்டி மனமகிழ
வாழ்த்துகிறோம்.

வணங்குகிறோம்.. செபிக்கிறோம்.....

**SACRED HEART CONVENT,** VANDAVASI

# தனக்கொன்று தடத்தை பதித்த ஆயர். தந்தை ஜான் ஆலன்!



எம் தந்தை ஆலனே
இதயத்தில் மறைப்பரப்பு தாகத்தோடு
ஏக்கத்தோடு, தீராத ஆர்வத்தோடு
இயேசுவை அறியாத மக்களுடன்
இறை ஆட்சி விழுமியங்களை பகிர்ந்துக்
கொள்ள வேண்டும் என்ற உயர் சிந்தனையோடு
பிறந்த மண்ணை துறந்து
துறவற பயிற்சிகள் பல பெற்ற
தன்னையே மறைபரப்பு வாழ்வுக்கு தயார்படுத்தி
பலவிதமான பயண தடைகளை தாண்டி
இயற்கை சீற்றங்களை கண்டும் பயமில்லாமல்
உடல், உள்ள உபாதைகளையும் சமாளித்து
இவ் இந்திய மண்ணிலே
பெரும் வரலாற்று நாயகனாய்
சரித்திரம் படைக்கப் போகிறோம்!

துறவற சபையின் நிறுவுனர் என்ற
பெயரையும், பெருமையையும் தாங்கிட போகிறோம்!

சமத்துவம் என்னும் புரட்சி விதையை
விதைக்கப் போகிறோம்!

என்று எதுவும் அறியாமல்
எம் இந்திய மண்ணிலே தடம் பதித்தீர்! ஆனால்,
உம் தனித்துவமான, தைரியமான,
எதிர்நோக்கோடு கூடிய
உம் தனிப்பட்ட வாழ்வும், பணிவாழ்வும்
இவ்வுலகிற்கு சொல்லாமல் சொல்லியது
எம் தந்தை ஆலன்
**“தடம் பார்த்து நடப்பவர் அல்ல மாறாக,**
**தனக்கென்று தடத்தை பதிப்பவர்”**

எம் தந்தை ஆலனே உம் விண்ணக பிறப்பு
விழாவிலே உம்மை வாழ்த்துகிறோம்.
உம் ஆசீர் வேண்டுகிறோம்.

**“நீர் புனிதர் ஆகும் நாளுக்காய் ஏங்கி நிற்கின்றோம்!”**



**Sr. Soruba Rani**
*Alvernabhavan*
*Siddharth Nagar*

# ஆயர். தந்தை ஜான் ஆலன் அவர்களோடு...



18–ஆம் நூற்றாண்டில் வெள்ளையரின் வியாபார தளமான சென்னையில் ஆளும் வர்க்கமான ஆங்கிலேயர் கூட்டமும், ஆங்கிலே – இந்திய குடும்பங்களும் இருந்தன. அடிமைப்பட்டிருந்த தமிழின மக்களிலும் உயர்குடிமக்கள், தாழ்குலத்தவர் என்ற பிரிவுகளிலிருந்து சாதி, மதம், பழக்கவழக்கங்களின் பாகுபாடுகள் நிலவியது. இவற்றை மாற்றி அமைக்க மனித குலத்தின் மாணிக்கமாய் உதித்தவர் தந்தை ஜான் ஆலன்.

இவர் 1852–ஆம் ஆண்டு ஹாலந்து நாட்டில் டில்புர்க் என்னும் சிற்றுரில் ஜெரால்டு ஆலன் – அன்டோனியா பிங்க் என்னும் தம்பதியினருக்கு பிறந்த நான்கு மக்களில் மூன்றாவது மகனாய் பிறந்தவர் தான் தந்தை ஜான் ஆலன்.

இளம் வயதிலேயே பெற்றோரை இழந்த போதும் எந்த சூழலையும் சவாலோடு சந்திக்கும் திறனையும், கல்வி கற்க்கும் போது எழுத்துக்கலோடு எண்ணங்களையும் வளர்த்துக் கொண்டவர் இவர். 1867–ல் துறவற அழைப்பை ஏற்று 1878ஆம் ஆண்டு மில்ஹில் மறைபரப்பு சபையில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1879ஆம் ஆண்டு ஆப்கான் போர் நடந்துக் கொண்டிருந்த போது போர் களத்தில் காயப்பட்டு உயிருக்க போராடி கொண்டிருந்த மக்களுக்கு பணி செய்ய இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். அப்பணி முடிந்ததும் சென்னை ஆயர் ஜோசப் கால்கனால் 1881ஆம் ஆண்டு வேப்பேரி புனித பெலவேந்திரர் ஆலயத்திற்க்கு பங்கு குருவாக நியமிக்கப்பட்டார்.

பங்கு குருவாக பணியாற்றிய இரண்டு ஆண்டுகளில் நிறைய பணிகள் ஓய்வின்றி செய்தார் அவற்றில் சில:

1. பீடச்சங்கம் ஒன்று துவங்கப்பட்டது.
2. மூன்று பள்ளிகள் துவங்கப்பட்டது.
3. கத்தோலிக்க வரவேற்பு சங்கம் ஒன்று துவங்கினார்.
4. மதுவிலக்கு சங்கம் துவங்கப்பட்டது.
5. குழந்தைகளுக்காக ஞாயிறு மறைக்கல்வி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.
6. 1000–க்கும் மேற்ப்பட்ட மக்களை மனமாற்றினார்.

**“இவை அனைத்தும் தந்தை ஜான் ஆலன் 30 வயதிற்க்குள் செய்தார்.”** இவர் 1883ஆம் ஆண்டு ஏழை குழந்தைகளுக்கு கல்வி புகட்டவும், புனித வேதத்தில் மக்கள் அனுபப்படவும் ஒரு மடம் நிறுவினார். இதே ஆண்டில் புனித பிரான்சிஸ் சபையை தோற்றுவித்தார். “எழுப்பி விடுவதைவிட எழும்ப தூண்டுவதே மேல்” இதற்கு செயல் வடிவம் கொடுத்த 1887ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19ம் நாள் நிறுவப்பட்டது தான் நமது புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபை.

மண்ணில் பெண்களை பார்த்தார் நீங்களே தான் உங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்றார். ஆகட்டும் என்று சொன்னவர்களை அழைத்தார். இதனால் விடுதலை இயக்கம் ஒன்று சென்னை வேப்பேரியில் துளிர்விட துவங்கியது. சிறிய விதையாக விதைக்கப்பட்ட இச்சபை இன்று பரந்து விரிந்துள்ளது.



ஆயர் தந்தை ஜான் ஆலன் இறையுணர்வில் ஊன்றியிருந்தவர். உழைப்பில் உயர்ந்தவர், எளிமையை விரும்பியவர். அனைத்திற்க்கும் மேலாக இறைவனிலும், மனிதரிலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தவர். நமது தந்தையின் விருதுவாக்கு **"நம்பிக்கையே பொய்க்காது" (உரோ:5:5)** எனவே தந்தையினுடைய விருதுவாக்கை பின்பற்றியவர்களாக அவரது கனவை நனவாக்கும் வகையில் இறை பணியாற்றிடுவோம்.

*Sr. Yasodha Digal*
*Assisi Bhavan, Hallaur*

## உலக நோயாளிகள் தினம் (பிப்ரவரி 11)



உலக நோயாளிகளின் தினம் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 11 அன்று அனுசரிக்கப்படுகின்றது. இந்த தினம் 1992ஆம் ஆண்டு போப் இரண்டாம் ஜான் பால் அவர்களால் தொடங்கப்பட்டது. இந்நாள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கான முக்கியத்துவத்தையும், அனைவருக்கும் மனிதாபிமானத்தையும் வலியுறுத்தும் ஒரு நன்நாள் ஆகும். இவ் ஆண்டிற்கான தலைப்பு: "நம்பிக்கையே பெய்க்காது"

**உருவாக்கப்பட்ட பின் புலம்:**

1. **மரியாவின் திருவிழா:** பெப்ரவரி 11 அன்று லூர்து மரியாவின் திருவிழாவாக கொண்டாடப்படும். லூர்து, பிரான்ஸ் நகரம் மன்னிப்பு மற்றும் குணமளிக்கும் சக்திக்காக அறிவிக்கப்பட்ட ஒரு திருத்தலம்.

2. **மனித நேயம்:** நோயாளிகள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் அவர்களை நலமுடன் பார்த்துக் கொள்ளும் குடும்பத்தினரை கவனிக்கும் தேவை முன்வைக்க.

3. **தனிப்பட்ட அனுபவம்:** போப் இரண்டாம் ஜான் பால் தன்னுடைய பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்ட தன் பின்னணியில் நோயாளிகளின் வாழ்வின் நெருக்கடியையும், தேவைகளையும் எடுத்துக் காட்ட வேண்டியது மிகவும் முக்கியமாக கருதினார்.

**நோக்கங்கள்:**

1. நோயாளிகளின் தேவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
2. மருத்துவ பணியாளர்களுக்கு ஆதரவு வழங்குதல் மற்றும் அவர்களது பணியை பாராட்டுதல்.
3. நோயாளிகளுக்கு ஆன்மீகம் மற்றும் உடல் நலம் வழங்கும் நடவடிக்கையை ஊக்குவித்தல்.
4. நோய் பரவலை குறைக்கும் நடைமுறைகள் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் வழிகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

**உலக நோயாளிகளின் தினத்தின் முக்கியத்துவம்:**

**நோயாளிகளின் துயரத்தை உணருதல்:**

★ நோயாளிகள் எதிர்கொள்ளும் உடல், மன மற்றும் ஆன்மீக பிரச்சனைகளை சமூதாயம் புரிந்துகொள்வதற்க்கான வழி வகுக்கும்.

★ அவர்களின் வருத்தத்திற்க்கு மனிதாபிமானத்துடன் செவிசாய்ப்பதை ஊக்குவிக்கிறது.

**நலவாழ்வு பணியாளர்களுக்கு ஆதரவு:**

★ மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் போன்ற பராமரிப்பாளர்களின் சேவையை அங்கிகரிக்கிறது மற்றும் பாராட்டுகிறது.

★ அவர்கள் சந்திக்கும் சிரமங்களுக்காக ஆதரவை ஏற்படுத்துகிறது.

**ஆன்மீக ஊக்குவிப்பு:**

★ நோயாளிகள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கு ஆன்மீக துணையையும், நம்பிக்கையையும் வழங்குகிறது.

★ இறை நம்பிக்கையின் மூலம் மனதளவு சிகிச்சையை வலியுறுத்துகிறது.

**சுகாதாரத்தின் சமநிலை:**

★ அனைவருக்கும் சிகிச்சை மற்றும் சுகாதார சேவைகள் கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

★ குறிப்பாக ஏழை மற்றும் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கான சுகாதார அனுகலை முன்னேற்றுகிறது.

**சமூக பங்களிப்பு:**

★ நோயாளிகளை பராமரிக்கும் முயற்சிக்களில் தன்னார்வ அமைப்புகள், அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் பங்கெடுக்க ஊக்குவிக்கிறது.

உலக நோயாளிகள் தினம் அனைவருக்கும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதோடு துயரத்தின் போது மனிதாபிமானத்தை வெளிப்படுத்த ஒரு விழிப்புணர்வு நாளாக மாறியுள்ளது.

உலக நோய் தினம் என்பது மனித குலத்திற்க்கு ஆரோக்கியமாக வாழ வழிநடத்தும் ஒரு விழிப்புணர்வு நாளாக இருக்கின்றது. உலகின் பலவேறு நோய்களை குறைக்கும் முயற்சிகளுக்கு உதவுவதன் மூலம் நாம் அனைவரும் இணைந்து ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான உலகத்தை உருவாக்க முடியும் அதனால் நாம் நோய்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்து சுகாதாரமான வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டும்.



நோயின்றி நலமுடன் வாழ
உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

**"நம்பிக்கையே பெய்க்காது"**

**சகோதரி. இந்திரா**
புனித தோமையார் மருத்துவமனை

**ARUL SAGAYA ILLAM, MELROSAPURAM CONVENT CHAPEL BLESSINGS**





HAPPY FEAST DAY
OUR DEAR

*Lady of Lourdes*



HEALTH OF THE SICK.

*Pray for us*

# அர்ப்பணிக்கப்பட்டோர் தினம்

பிப்ரவரி 2ஆம் நாள் உலகெங்கும் உள்ள கதிதோலிக்க திரு அவை இந்நாளை அர்ப்பணிக்கப்பட்டோரின் நாளாக கொண்டாடுகின்றது. ஏனெனில் இன்று தான் இயேசுவை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள் இதனை மெழுகுவர்த்தி நாள் எனவும் திரு அவை சிறப்பாக கொண்டாடுகிறது.

இந்த தினத்தை அர்ப்பணிக்கப்பட்டோர் நாளாக கொண்டாடி மகிழ்ந்து இவர்களுக்காக சிறப்பாக செபிக்க புனித போப் இரண்டாம் ஜான் பால் 1997–ல் இந்த நாளை துவங்கினார்.

**இந்த நாளின் சிறப்பு அம்சங்கள்:**

1. அர்ப்பணிக்கப்பட்ட துறவிகள், குருக்கள் இவர்களுக்காக நாம் செபிக்க வேண்டும்.
2. விலைமதிப்பில்லாத இறைவன் தந்த பொக்கிஷமான இந்த அர்ப்பணத்திற்காக நன்றி சொல்லவேண்டும்.
3. அர்ப்பண வாழ்வில் உள்ளவர்களை ஊக்குவித்து அவர்களின் தன்னலமற்ற பணிக்காக நன்றி கூறி செபிக்க வேண்டும்.
4. அர்ப்பண வாழ்வுக்கு ஆர்வமிக்க இளம் உள்ளங்களைக் கண்டுகொண்டு இவ்வாழ்விற்க்கு வழிகாட்ட வேண்டும்.

மெழுகுவர்த்திகளை ஏற்றுவது கிறிஸ்து உலகின் ஒளி என்பதை அடையாளப்படுத்துகிறது. அவ்வாறே புனிதப்படுத்தப்பட்ட இருபால் துறவிகள் இயேசு கிறிஸ்துவின் ஒளியை பிரதிப்பலிக்க அழைக்கபடுகிறார்கள்.

நாம் இயேசுவின் ஒளியை பிரதிபலிக்கும் துறவியராக இவ் அர்ப்பணவாழ்வில் மகிழ்வுடன் வாழ தூய ஆவியானவர் நம் ஒவ்வொருவரையும் வழிநடத்துவாராக.

நம்மை இச்சபைக்கு அர்ப்பணித்த நம் அன்பு பெற்றோருக்காக, நம் உடன் பிறப்புகளுக்காக, வழிகாட்டிகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

அர்ப்பண வாழ்வில் தடுமாறும் அன்பு உள்ளங்களை நினைத்து விலைமதிப்பில்லா இவ்வாழ்வில் அவர்கள் இயேசுவின் அன்பை அதிகமாக உணர்ந்து அர்ப்பணத்தில் நிலைக்க கைகொடுப்போம். **“நமது சபையில் அர்ப்பணிக்கப்பட்டோர் எண்ணிக்கை உயர அனைவரும் இணைந்து செபிப்போம்.”**

அனைவருக்கும் இனிய நல் வாழ்த்துகள்...



**Sr. ARULANANDAMMAL**
St. Francis Convent, Italy, Vaprio

# சகோதரி. கிளாரா அவர்களின் விண்ணகப் பயணம்



எமது FSJ நிறுவுனரின் விருதுவாக்கான **"நம்பிக்கையோ பொய்க்காது"** என்பதை மனதில் இறுத்தி, எம் சபை பாதுகாவலர் புனித அசீசியைப் போன்று அர்ப்பணத்தில் மகிழ்ந்து, புனித கிளாராம்மாவின் பெயர் தாங்கி, இறைவிருப்பம் ஏற்ற, வீழ்ந்தாலும் விதையைப் போல் எழுகின்ற நம்பிக்கையை நெஞ்சில் வளர்த்துக் கொண்டவர்கள் அருமை சகோதரி. கிளாரா மேரி செல்வராஜ் இறைவனால் முன்குறிக்கப்பட்டு அவரின் அழைப்பை ஏற்று அவருக்கு ஏற்புடையவராகி, அவரது மாட்சியில் பங்கு பெற இறைவன் நம் சகோதரி அவர்களை தேர்ந்துக் கொண்டார். இத்தகைய சகோதரியின் பிறப்பு, அழைப்பு, அர்ப்பணிப்பு நம்மை வியக்க வைக்க கூடியது. தமது முன்னோர்களின் பிறப்பிடம் தமிழகம் என்றாலும் பிறப்பு முதலே மகாராஷ்டிரா மாநிலத்தை வாழ்விடமாக கொண்டவர்கள் நம் சகோதரி அவர்கள்.

திரு. செல்வராஜ் – திருமதி. தனம்மாள் அவர்களுக்கு பிறந்த நான்கு மக்கட் பேரில் இரண்டாவதாக 02.01.1962–ல் பிறந்தவர். நம் சகோதரி காணிக்கை மேரி என்று ஞானஸ்நான பெயர் சூட்டபெற்று கிளாரா மேரி என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டவர்கள்.

இரண்டு சகோதரர்களையும், ஒரு சகோதரியையும் உடன்பிறப்பாக கொண்டவர். திருவிவிலியத்தில் செபதேயுவின் மக்கள் யாக்கோபையும், யோவானையும் இயேசு அழைத்தது போல் நம் சகோதரி கிளாராவையும், பிரேமாவையும் தம் பணிக்கென ஒரே குடும்பத்திலிருந்து ஒரே சபையில் அழைத்திருப்பது எமக்கு வியப்பாய் உள்ளது.

பள்ளிப்படிப்பை மகாராஷ்ராவில் படித்து ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிகளிலும் சிறப்பு பெற்றாலும் தழிழையும் தன் தாய் போல் நேசித்து கற்றவர். தமது கல்விப் பணியில் குழந்தைகளுக்க மூன்று மொழிகளையும் சிறப்புடன் கற்றுத் தந்தவர்.

இசையில் அலாதி இன்பம் கொள்பவர் with joy full lips ஆங்கில பாடல் புத்தகத்தில் ஒவ்வொரு பாடல் வரிகளையும் உள்ளம் நெகிழ பாடி மகிழ்பவர், மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுப்பவர்.

பணிவிடை பெற அல்ல. பணிவிடை புரிவதே என்பது இவர்களின் விருதுவாக்கு. எல்லோருடனும் இயல்பாக பழகுவதும் அன்பை பகிர்வதும், மகிழ்ச்சியில் நிலைத்திருப்பதும் இவருக்க இறைவன் கொடுத்த மாபெரும் கொடை. தமது பணி வாழ்வில்

சபை தமக்கு கொடுத்த பணித்தளங்கலான ஹல்லூர், சித்தார்த் நகர், கோரக்பூர், டுண்லா, ஆவடி ஆகிய இடங்களில் சிறப்பாக பணிசெய்து தாக்குவரா பணித்தளத்தில் தமது பணியை இறுதியாக நிறைவு செய்தவர்.

உடல் நலிவுற்று இருந்தாலும், வலியை வலிமையாக ஏற்று மலர்ந்த முகத்துடன் வாழ்பவர்கள். தன்னம்பிக்கையுடன் பணி செய்ய ஆர்வம் கொண்டு வட இந்தியா சென்றார்கள். பொங்கல் பண்டிகையை பொங்கும் மனநிலையில் கொண்டாடி மகிழ்ந்த நம் சகோதரியை இறைவன் தம்முடன் இருந்து தம் உறைவிடத்திற்கு அழைத்துக் கொண்டுள்ளார். இவரின் பிரிவு சபை தலைமை அன்னை முதல் இளம் சகோதரிகள் வரையிலும் மற்றும் உடன் பிறப்புகளுக்கும் ஏற்றுக் கொள்ள முடியாததாக உள்ளது எனினும் இதுவே இறை திருவுளம் இறைவன் இவர்களை விரும்பி அழைத்துள்ளார். அதுவே நம்பிக்கையாளர்களின் எதிர்நோக்கு. சகோதரி. கிளரா செல்வராஜ் உங்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாறா எங்களின் செபங்கள்.

– **சபை தலைமையகம்**

---



*congratulations*

உயர் கல்விதுறை அமைச்சர் திருமிகு கோ.வி. செழியன் அவர்களின் வாழ்த்துகளுடன் திரு.வி.க தொகுதி எம்.எல்.ஏ திருமிகு. தாயகம் கவி அவர்களிடமிருந்து கவிஞானி நற்கவிஞர் விருது பெற்ற அருட்சகோதரி. அமல ஜெயந்தி அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகளும் பாராட்டுக்களும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

---

*congratulations*

Nithyasri, Our Student of Class 8-B, from Sagayamadha High School, AS Nagar, Ennore, Had won 3rd Prize in the state Level Silambam Competition for Girls under 14 year age group.



# ANNUAL RETREAT



Senior Sisters






Under the Generalate





St. Joseph's Province



Bishop John Aelen Province



Junior Sisters

# தமிழர் திருவிழா


Senior Sisters, Generalate


Junior Sisters, Generalate


Hallaur


Gorakhpur


Takurdwara


Provincialate, Agra


Mithaura


Elambalur


St. Dominic's, Perambalur


St. Thomas Hospital


P.T. Parru


St. Theresa of Child Jesus

# Happy Birthday Sisters

May the light of heaven shine
upon you and bring peace to your heart.
May the love of God be with you always and forever.

## FEBRUARY

2025

| | |
|---|---|
| 1st | Sr. Mary Lillian |
| 2nd | Sr. Lourdu Mary Nancy<br>Sr. Susinal Mary<br>Sr. Vimala Rani .A |
| 3rd | Sr. Amala Francis |
| 4th | Sr. Mercy Fathima<br>Sr. Victoria Rose Mary<br>Sr. Nirmala Mary Princy |
| 6th | Sr. Nirmala Manickaraj<br>Sr. Valarmathi |
| 8th | Sr. Monica .D |
| 9th | Sr. Selva Mary .K<br>Sr. Odila Mary |
| 10th | Sr. Alangara Mary Merlin<br>Sr. Josephine Gabriel Regina<br>Sr. Guna Nancia |
| 11th | Sr. Antoniammal Josephine<br>Sr. Punitha Annammal |
| 12th | Sr. Irudaya Mary Ignacy<br>Sr. Jecintha Simeon |
| 13th | Sr. Maria Nesa Jacintha |
| 14th | Sr. Arul Jeyarani |
| 15th | Sr. Leema Rose Kulandaisamy |
| 16th | Sr. Jayaseeli .A |
| 17th | Sr. Gandhi Leena Mary |
| 18th | Sr. R. Amalorpava Mary<br>Sr. Priscilla |
| 19th | Sr. Angela Mary Irudayam |
| 21st | Sr. Mary Susanna<br>Sr. P. Arputha Mary |
| 22nd | Sr. Adaikala Mary<br>Sr. Shakila .R |
| 24th | Sr. Fathima Mary .A |
| 25th | Sr. Pushpa Thomas<br>Sr. Rose Jaya Mary<br>Sr. V. Sneha |
| 26th | Sr. Juliet Mary Simiyon<br>Sr. Marukiruthal<br>Sr. Angel Mary Michael |
| 27th | Sr. Sagaya Rani Savarimuthu |
| 28th | Sr. Ruby Stella<br>Sr. Pushpa Leela |




Be happy & Stay blessed

# Beloved Sisters...



# Departed in Christ....



| | |
|---|---|
| Sr. Mary Carmel | 03.02.1998 |
| Sr. Mary Francis | 04.02.1918 |
| Sr. Mary Rosali | 04.02.1994 |
| Sr. Mary Philomina | 08.02.1933 |
| Sr. Mary Leema Rose | 11.02.1919 |
| Sr. Mary Magdalene | 12.02.1994 |
| Sr. Mary Bernard | 13.02.1964 |
| Sr. Mary Xavier | 14.02.1941 |
| Sr. Mary Sacred Heart | 14.02.1971 |
| Sr. Mary Placia | 14.02.1990 |
| Sr. Mary Britto | 19.02.2013 |
| Sr. Mary Augustine | 21.02.2019 |
| Sr. Baby Amalorpavam | 22.02.2020 |
| Sr. Mary Xavier | 25.02.1933 |
| Sr. Mary Immaculate | 25.02.1984 |
| Sr. Antony Sagaya Mary | 28.02.2017 |

*May their souls Rest in Peace*

# சமூக தொடர்பு

# பணிக்குழு

## வேண்டுகோள்!



**"உறவே நீ பேசு"** என்ற மாத இதழ் வெற்றிகரமாக 69 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

## நிறுவுனர் தந்தையின் விண்ணகப்பிறப்பு விழா மற்றும் அர்ப்பணிக்கப்பட்டோர் தின நல்வாழ்த்துக்கள்

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*


**Email: communicationfsj2022@gmail.com**



**Dr. Sr. Mary Jenova fsj**
*General Councilor*
*Communication Commission*



Under the Generalate Superiors Meeting



St. Francis of Assisi Province Superiors Online Meeting



FSJ TET Group Orientation Program



Retirement Function Vandavasi



Blessing (Building Extension) Vandavasi



St. Joseph Province Superiors Meeting



Bishop John Aelen Province Superiors Meeting



Micro - Credits Program, Vepery

# THE PRESENTATION AT THE TEMPLE WORLD DAY FOR CONSECRATED LIFE



Printed By: St. Joseph's Press, Mugalivakkam, Ch - 125. 9150 911 252 / 9003 057 997